# தவக்காலம் 3ஆம் வாரம் - ஞாயிறு

## இரண்டாம் ஆண்டு

### திருப்பலி முன்னுரை

கருணையுள்ளம் கொண்ட இறைவனின் இரக்கத்தினால் நிலைவாழ்வை பெற்றுக் கொள்ள தவக்கால 3-ஆம் ஞாயிறு நம்மை அழைக்கிறது.

நிலைவாழ்வை பெற்றுக் கொள்ள இறை வாழ்வில் இணைய வேண்டும். இறை வாழ்வு என்பது இறைவார்த்தையை வாசிக்க, தியானிக்க என்பதோடு நின்று விடாமல் அவை நம் வாழ்வாக இறைவனிடம் வேண்டுவோம்.

மனிதன் தன் பலவீனத்தால் தவறும் போது நம்மை தண்டிக்க கடவுள் ஒன்றும் மனிதனில்லை. நம்மை மனமுவந்து மன்னித்து மகிழ்வளிக்கிறார். இறைவனின் சாயலில் படைக்கப்பட்ட நாம் அவர் இனிய இரக்கச் செயல்களையும் நம்மில் கொள்வோம்.

இன்றைய முதல் வாசகத்தில், 'நானே உன் கடவுளாகிய ஆண்டவர். என்னைத் தவிர வேறு தெய்வங்கள் உனக்கு இருத்தல் ஆகாது என் கிறார் கடவுள். வானத்தையும், பூமியையும், அதில் வாழும் உயிர்களையும் படைத்த கடவுளின் வல்லமையை அனுபவித்துக் கொண்டிருக்கும் நாம், ஒவ்வொரு உயிர்களிடத்திலும் இறைவனைக் காண்போம். அவற்றையெல்லாம் இறைவனாக்க வேண்டம் என்பதே இறை விருப்பம். ஆண்டவர் ஓய்வு நாளுக்கு ஆசி வழங்கி அதை புனிதப்படுத்தினார்.

யூதர்கள் கடைபிடித்தது போல வெறுமனே சட்டம், சம்பிரதாயங்களாக மனதிற் கொள்ளாமல் இறைவனுக்கு விருப்பமான காரியங்களில் நம்மை ஈடுபடுத்துவோம்.

ஆடம்பர காரியங்களுக்காக பல மணிகளை செலவிடும் நம்மால், இறைக் காரியங்களுக்காக சில மணித் துளிகளை செலவிட மனம் இசைய மறுக்கிறது. இதயத்தில் இறைவனை வைப்போம். ஓய்வு நாளை இறைவனுக்காக வைப்போம். உன் வாழ் நாட்கள் நீடிக்க, உத்தமமான காரியங்களை உன் கரங்கள் செய்யட்டும். நேரிய பாதையில் கால்கள் நடை போடட்டும்.

இன்றைய நற்செய்தி வாசகத்தில், “என் தந்தையின் இல்லத்தை சந்தை ஆக்காதீர்கள்” என்று கோபத்தில் கொந்தளிக்கிறார் இயேசு. இன்றைய சமுதாயத்தில் இறைவன் வாழும் ஆலயங்களாகிய மக்கள் சுரண்டப்படுகிறார்கள்; விற்கப்படுகிறார்கள் வியாபாரத்திற்காக.

எறும்பின் சுறுசுறுப்பையும் மானின் வேகத்தினையும் பெற்ற கூட்டம்

நய வஞ்சக நரிகளிடமும் மெல்லோட்ட ஆமையிடமும் அடிபணிய நேரிடுகிறது

இறையரசு வரும் காலத்தில் இவையனைத்தும் கடந்து போகும்.

ஆமைகள் தோற்கடிக்கப்பட்டு நரிகளுக்கு வலைகள் விரிக்கப்பட்டு

உண்மையும் உழைப்பும் மட்டும் மேலாக்கப்படும், மேன்மைப்படுத்தப்படும்.

யூதர்கள் அரும் அடையாளங்களை எதிர்பார்த்தனர். அடையாளங்களைக் கண்ட பலர் இறைவனை நம்பினர். இவ்விருவரையும் ஆண்டவர் ஆமோதிக்கவில்லை. ஆண்டவர் ஒருவரே. அவரால் நாம் உருவானோம். வாழ்விலும் தாழ்விலும் இறைவனுக்கே மகிமை என்ற விசுவாசமே இறைவனால் ஏற்கப்படும் என்ற சிந்தனையோடு இத்திருப்பலியில் இணைவோம்.

## மன்றாட்டுக்கள்:

***பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.***

1. இறை ஊழியத்தையும் ஆலயத்தையும் செம்மைப்படுத்த விரும்புபவரே எம் இறைவா!

இறையாட்சி பணிக்காக நீர் அழைத்துள்ள எம் திருச்சபைத் தலைவர்கள், ஆயர்கள், குருக்கள் மற்றும் துறவறத்தார் அனைவரும் நீதியின் பாதையில் நடந்து இறைபணி புரிய வல்லமையை அருள வேண்டி இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. வளமாக வாழ கட்டளைகளை கற்பித்தவரே எம் இறைவா!

உமது அன்பின் கட்டளைகளுக்கு வாழ்வு கொடுத்து, பெற்றோருக்கு கீழ்படியும் மக்களாகவும், கற்பு, ஒழுக்க நெறிகளில் மேம்பட்ட மக்களாகவும் நாங்கள் வாழ்ந்திட வரம் வேண்டி இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. உலகத்தால் அவமான சின்னமாக கருதப்பட்ட சிலுவையால் எம்மை மீட்டவரே!

எங்கள் வாழ்வில் ஏற்படும் போராட்டங்கள், எதிர்நோக்குகள் வழியாக நாங்கள் மீட்பைப் பெற்றுக் கொள்ள மன உறுதியோடு எங்கள் சிலுவைகளைத் தாங்கி மீட்பைப் பெற்றுக் கொள்ள இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4. சமூக நீதிகளைச் சாடியவரே எம் இறைவா!

நாங்களும் உம்மைப் போல சமூக அக்கறை கொண்டு, தாழ்த்தப்பட்டும், வஞ்சிக்கப்பட்டும், ஒடுக்கப்பட்டும் வாழும் மக்களுக்கு குரல் கொடுக்கும் துணியும் மனதைத் தந்திட இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**நன்றி: ஆசிரியை. திருமதி. ஜோஸ்பின் சாந்தா லாரன்ஸ், பாவூர்சத்திரம்.**

**"கடவுள் அன்பாய் இருக்கிறார்!" 1 யோவா 04: 16**

மறைத்திரு. அமிர்தராச சுந்தர் ஜா.

info.arulvakku@gmail.com; + 91 843 802 1938; www.arulvakku.com